[2019 ஜூலை 11

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், உங்களுடைய உரிமையை நான் மறுக்கவில்லை, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமைகளை நான் மறுக்கவில்லை. அதேநேரத்திலே பேரவைத் தலைவர் கொடுத்திருக்கிற ruling-ஐ நீங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்துவது விவாதமாக இருக்கக் கூடாது என்கிற காரணத்தினாலேதான், அதை நான் வேண்டாம் என்று நீக்கியிருக்கிறேனேயொழிய, வேறொன்றும் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிற நோக்கம் எனக்கும் புரிகிறது. ஆனால் நான் கொடுத்த ruling-ஐ மேற்கொண்டு வற்புறுத்த முடியாது என்கிற காரணத்தினாலே, அதை நான் நீக்கியிருக்கிறேனேயொழிய, வேறொன்றும் இல்லை. (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. இந்த சப்ஜெக்டில் மேலும் விவாதம் வேண்டாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, போதும். ஏற்கெனவே, இந்த சப்ஜெக்டில் நிறைய விவாதித்து விட்டோம். (குறுக்கீடு) சற்று பொறுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் பேசியதை நான் நீக்கியதற்குப் பின்னாலே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் பேசியவற்றை நான் record செய்துகொண்டேன். Argument-ஐ நான் மறுக்கவில்லை. நீங்கள் பேசியதை நான் expunge செய்யவில்லை. (குறுக்கீடு) உங்களுடைய argument-ஐ முழுமையாக நான் ஏற்றுக்கொண்டேன். ஆனால், திரு. ஆஸ்டின் அவர்கள் பேசியது என்னுடைய ruling-க்கு எதிராக இருந்த காரணத்தினாலே அதனை நான் நீக்கியிருக்கிறேன். வேறொன்றும் இல்லை. அதோடு, இந்த விவாதத்தை விட்டுவிடுங்கள்.

5. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் இன்றைக்கு பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். நேற்றையதினம் ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த 9 அறிவிப்புகளையும், இன்றையதினம் 5 அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளார்கள். இத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது 77 அறிவிப்புகளையும் சேர்த்து, மொத்தம் 91 அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோவை மாவட்டத்திற்கு அறிவித்த பேருந்து நிலையத்திற்கு இன்றையதினம் நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்தமைக்காக கோவை மாவட்ட மக்களின் சார்பாகவும், துறை சார்பாகவும் நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐக்கிய நாடுகளின் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்த, நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளில் பெரும்பாலானவை குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியோர்களைச் சார்ந்ததாகும். வாழ்வின் அனைத்து நிலைகளிலும் மேம்பட தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டுவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூக நலன், சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைகளுக்காக வெளியிட்ட அறிவிப்புகளில், 10 அறிவிப்புகளை சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்கும், 3 முத்தான அறிவிப்புகளை மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கும் அறிவித்துள்ளார்கள். நம்முடைய சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை இந்தியாவிலேயே ஒரு முதன்மைத் துறையாக, இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில்*

நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிறகு வாய்ப்புத் தருகிறேன். அமைதியாக இருங்கள்.

6. கவன ஈர்ப்பு

தமிழ்நாட்டில் கொப்பரைத் தேங்காயைக் குறைந்தபட்ச ஆதார விலையில் கொள்முதல் செய்வது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V.ஜெயராமன், பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் கொப்பரைத் தேங்காயைக் குறைந்தபட்ச ஆதார விலையில் கொள்முதல் செய்வது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு நல்ல விலை பெறுவதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்